என்று உறுதிமொழி கொடுத்தும் இதுவரையில் அந்த அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காரணம், நேர மில்லாமையே தவிர வேறொன்றுமில்லை. எப்படியும் இந்த மன்றத்தில் விவாதிக்கப்படும், விரைவில்.

கிராமப்புறச் சாலைகள்

* 150 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் கிராமப் புறங்களில் கப்பிச் சாலைகள் அமைத்திட பணம் ஒதுக்க வேண்டி மத்திய அரசினை தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. எனினும், மத்திய அரசின் மானிய உதவியுடன் 1,500 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகைகளைக் கொண்ட ஊர்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முக்கிய நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கு கப்பிச் சாலைகள் போடப்பட்டுச் சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலத்திற்கு நகர்ப் புறங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணத்தை கிராமப் புறங்களுக்கு ஒதுக்கி, கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகளைக் கப்பிச் சாலைகளாக உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருபுறச் சாலை களும் ஒருசேரக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒன்றைப் புறக்கணித்துவிட்டு, மற்றொன்றைக் கவனிப்பது என்பது சரியல்ல. கிராமப்புறச் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், புதிய இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துவதற்கும் 1970-71, 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் 1 கோடி 10 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப் பட்டு வந்தது. இப்பொழுது 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க மத்திய அரசு ஒரு

1972 ஆகஸ்டு 18]

திட்டம் வகுத்திருக்கிறது. ஆகவே, உடனடியாக 281 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய இணைப்புச் சாலைகளை அமைப்பதற்கும், 1,427 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைச் சீர்படுத்துவதற்கும் ஆறு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துவிட்டது. 1972–73 ஆம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாய் செலவாகும். இதற்கு ஈடாக ஒன்றரை கோடி ரூபாய் உதவி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இணைப்புச் சாலைகள் அமைப்பது சம்பந்தமாக 1,500 மக்கட் தொகை என்று இப்பொழுது வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் உள்ள கிராமங்களில் மக்கட்தொகை சற்று குறைவாக இருந்தால்--குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி இருக்கிறது—விதிவிலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? இது குறித்து அரசு புனர்ப்பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட பகுதிகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது ஓரளவு நிறைவேறுகிற சூழ்நிலை ஏற்பட்ட பிறகு மாவட்டத் தன்மைகளை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்கள் வகுக்கலாம்.

திரு. தொ. ப. சீனிவாசன் : கிராமப்புறச் சாலைகள் இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகப் பராமரிக்க வேண்டுமென்னும் போது பல ஊராட்சி ஒன்றியங்களில் பொதுநிதி முழுக்க முழுக்க இல்லாது இருக்கின்ற நிலை இருக்கிறது. தமிழகத்தில் இப்படி பற்றுக்குறை இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை பெருவழித் துறையில் எடுத்து நடத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசாங்கத்தினுடைய பெருவழித் துறையினர் எடுத்துக்கொள்வது என்ற நிலை வருகிறபோது ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்களின் சாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே ஒரு முறை வகுக்கப் பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்களின் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்க, ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை பெருவழித் துறையினர் எடுத்துக்கொள்ளும் நிலை ஏற்படும்.

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தும் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. தீவிர கிராம சீரமைப்புத் திட்டத்தின் கீழும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து ஓரளவு குறைகளை சிறிதளவு போக்க முடியும் என்று கருதலாம்.

Storm Water Drainage System in Madras

* 151 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to prevent the flooding of the low-lying streets during the rainy seasons in the City of Madras?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னை நகர வெள்ள வடிகால் அமைப்பை மேம்படுத்த ஓர் அடிப்படைத் திட்டம் தயாரிப்பதுடன் வெள்ளத்தால் வரும் கஷ்டங்களுக்குத் தீர்வு காணத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: ஒவ்வொரு வருஷமும் சாதாரண மழை பெய்தாலும் எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்குவதன் காரணமாக இதைத் தடுக்க உடனடியாக ஏற்பாடு செய்து அதிகமான தண்ணீர் நிற்கக்கூடிய இடங்களில் பம்புகள் வைத்து இறைக்கவும், தாழ்வான இடங்களை மேம்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னை மாநகராட்சிச் சாலைகளைப் பொறுத்தவரையிலும் 1,169 கிலோ மீட்டர் நீளம் உள்ளவையாக இருக்கின்றன. அதிலே 250 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் வடிகால் அமைந்திருக்கின்றது. மற்றைய பகுதிகளுக்கு வடிகால் அமையவில்லை. இதற்காக கடனாக 87 லட்சமும் மாநகராட்சி 50 லட்சமும் ஆக ஒரு கோடி முப்பத்தேழு லட்சம் ரூபாய் கடந்த பத்தாண்டுகளில் செலவழித்தும் போதுமானதாக இல்லை. கடந்த 22—11—1971 அன்று தலைமைச் செயலகத்தில் மாநகராட்சி மன்ற அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி பிறகு வடிகால் திட்டம் அமைப்பது பற்றி 14—12—1971 அன்று யோசனை தெரிவிக்கப் பட்டது. அதன்படி இதற்காகத் தனிச் செயற்குழு அமைப்பது